සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**OLD**

**2562** - ஆரம்பப் பிரிவேனா இறுதிப் பரீட்சை - **2018** டிசம்பர்
Mulika Priven Final Examination - 2018 December
(பழைய பாடத்திட்டம் - Old Syllabus)

**12 T**

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**2018.12.30 /08.30 - 11.40**

(12) தமிழ் மொழி
Tamil Language

மேலதிக வாசிப்பு நேரம் - **10** நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

பகுதி **I** இல் உள்ள முதலாம் வினாவுக்கும் பகுதி **II** இல் இரண்டாம் வினாவுக்கும் வேறு மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

சுட்டெண்:- ..............................

## பகுதி I

● இப்பகுதிக்குரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.

**1.** (i) பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(1) சூரியன் என்ற சொல்லின் ஒத்த பொருள் தரும் சொல் : ..............................

(2) புண்ணியம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல் : ..............................

(3) வட்டம் என்பதன் பன்மைச் சொல் : ..............................

(4) பற்கள் என்பதற்குரிய ஒருமைச் சொல் : ..............................

(5) நடிகன் என்பதற்குரிய பெண்பாற் சொல் : ..............................

(ii) பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(6) நாயின் இளையது குட்டி; தவளையின் இளையது : ..............................

(7) குயில் கூவும்; காகம் : ..............................

(8) சித்திரம் வரைபவன் ஓவியன்; சிலைகள் செதுக்குபவன் : ..............................

(9) வாழைப்பழம் சீப்பு; திராட்சைப் பழம் : ..............................

(10) ஐம்பதாவது ஆண்டு விழா பொன் விழா; எழுபத்தைந்தாவது ஆண்டு விழா : ..............................

(iii) பின்வருவனவற்றைச் சேர்த்து எழுதுக.

(11) முள் + கள் ..............................

(12) நீலம் + பூ ..............................

(13) புளி + கறி ..............................

(iv) பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக.

(14) பாட்டுப் போட்டி ..............................

(15) காற் சட்டை ..............................

(v) பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

(16) அ, இ, உ என்பன (வினாவெழுத்துக்கள், சுட்டெழுத்துக்கள், உயிர் மெய் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள்)

(17) அகச்சுட்டாக வந்துள்ள சொல் (அம்மனிதர், எப்பொருள், அவர், அக்கரை)

(18) தொழிற்பெயராக வரும் சொல் (படித்தான், படி, படித்தல், படித்தானா)

(19) என்னுடைய கை என்பது (எட்டாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை)

(20) அஃறிணை பன்மை வினைமுற்றுச்சொல் (வந்த, வந்தது, வந்தன, வந்ததா)

[ பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

(21) ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான பெயர் (பாகன், மூடன், அதிபர், பண்டிதை)

(22) ரோசாப் பூக்களின் மணம் எங்கும் பரவியது - இவ்வாக்கியத்தின் எழுவாய் (எங்கும், மணம், ரோசா, பரவியது)

(23) சித்தார்த்தர் வளர்மதி போல வளர்ந்து வந்தார். இங்கு வளர்மதி என்பது (உவமை, உருவக, தன்மை, தற்குறிப்பேற்ற) அணியாகும்.

(24) கடிநாய் என்பது (உவமைத்தொகை, பண்புத்தொகை, வினைத்தொகை, உம்மைத்தொகை)

(25) வெள்ளைப் புறாக்கள் வானத்தில் பறந்தன. இங்கு வெள்ளை என்பது (பெயரெச்சம், வினையெச்சம், உவமை, பெயரடை)

(vi) பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

(26) வாணம் கறுத்து மழை பெய்தது.

..............................................................................................................................

(27) கூடை நிரைய பழங்கள் இருந்தன.

..............................................................................................................................

(28) புயல் வீசியதால் வீடுகல் சேதமாகின.

..............................................................................................................................

(29) ஆசிரியர் கேழ்விகள் கேட்டார்.

..............................................................................................................................

(30) அதிக மழையினால் குலங்கள் நிரம்பின.

..............................................................................................................................

(vii) பின்வரும் வாக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்க்குக.

(31) ඔහු බොහෝ කලක් ජීවත් වේවා.

..............................................................................................................................

(32) කම්කරුවෝ වැඩ කරති.

..............................................................................................................................

(33) ලියුමක් මගින් තොරතුරු යවමු.

..............................................................................................................................

(34) හාවා වේගයෙන් දුවයි.

..............................................................................................................................

(35) කරුණාකර මේ ලියුම් කියවන්න.

..............................................................................................................................

(viii) பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்குக.

(36) அம்மா கடையில் தேங்காய் வாங்கினார்.

..............................................................................................................................

(37) இன்று கூட்டம் நடைபெறுமா?

..............................................................................................................................

(38) நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்.

..............................................................................................................................

(39) அரச ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

..............................................................................................................................

(40) நாங்கள் சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

..............................................................................................................................

*(01 × 40 = 40 புள்ளிகள்)*

* *

[ பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**OLD**

2562 - ஆரம்பப் பிரிவேனா இறுதிப் பரீட்சை - 2018 டிசம்பர்
Mulika Priven Final Examination - 2018 December
(பழைய பாடத்திட்டம் - Old Syllabus)

**12 T**

(12) தமிழ் மொழி
Tamil Language

பகுதி **I** இனை வேறாக்கி அதனை பகுதி **II** விடைத்தாளுடன் இணைத்து உமது மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

## பகுதி II

இப்பகுதியில் இரண்டாம் வினாவுக்கும் மேலும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு, உமக்கு வழங்கப்படும் விடைத்தாளில் விடை எழுதுக.

**2.** பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களில் கட்டுரை ஒன்று எழுதுக.

(i) சூழலைப் பாதுகாப்போம்
(ii) உடல் ஆரோக்கியம் பேணுதல்
(iii) பௌத்த சமயமும் கலைகளும்
(iv) மழை நாள்

*(15 புள்ளிகள்)*

**3.** பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

> நாம் குடிக்கும் நீர் சுத்தமான நீராக இருக்க வேண்டும். சுத்தமான நீருக்கு நிறம், மணம், சுவை என்பன கிடையாது. குடிக்கும் நீரை நன்றாகக் கொதிக்க வைத்து ஆறிய பின்னர் குடிப்பது சுகத்துக்கு ஏற்றது. வடிகட்டுவதாலும் நீரைச் சுத்தம் செய்யலாம். சூடான தேசத்தில் வசிக்கும் நாம் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ இரண்டு லீற்றருக்கு குறையாது தண்ணீர் பருகுதல் வேண்டும். நீரை இடையிடையே பருகுவது நல்லது. இது சிறுநீரகம் சீராகச் செயற்பட உதவுகிறது.

(i) சுத்தமான நீரின் இயல்பு யாது?
(ii) நீரைச் சுத்தம் செய்யும் வழிகள் யாவை?
(iii) எமது தேசம் எத்தகையது?
(iv) நாள் ஒன்றுக்கு நாம் அருந்த வேண்டிய நீரின் அளவு யாது?
(v) சிறுநீரகம் சீராகச் செயற்பட உதவியாக அமைவது எது?

*(15 புள்ளிகள்)*

**4.** உங்கள் கிராமத்திலிருந்து நகரத்துக்குச் செல்வதற்கான வீதி பழுதடைந்து காணப்படுகிறது. மழைக்காலங்களில் வீதியால் பயணம் செய்ய முடியாது. மழை நீர் ஆங்காங்கே குழிகளில் நிறைந்திருக்கும். வீதி சேறும் சகதியுமாகப் போக்குவரத்து செய்ய முடியாது காணப்படும். இதனால் பாடசாலை மாணவர்கள், தொழிலுக்குச் செல்வோர், வயோதிபர், நோயாளிகள் என்று பலரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். இவை பற்றிக் குறிப்பிட்டு, இவ்வீதியினை விரைவில் புனரமைப்புச் செய்து தருமாறு கோரி உங்கள் உள்ளூராட்சிச் சபைத் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

*(15 புள்ளிகள்)*

[ பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**5.** பின்வரும் குறைவாக்கியங்களை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான சொல்லை வினா இலக்கத்துடன் உமது விடைத்தாளில் எழுதுக.

(i) சென்ற மாதம் நாங்கள் சுற்றுலா ...........................................................................

(ii) நாளை கடுங்காற்றுடன் மழையும் ...........................................................................

(iii) மாமா எங்கே ...........................................................................

(iv) பசு மிகவும் சாதுவான ...........................................................................

(v) எனது ஆசிரியர் மிகவும் ...........................................................................

*(15 புள்ளிகள்)*

**6.** பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஐந்து** சொற்களை வைத்து தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.

(i) துறவி

(ii) காடுகள்

(iii) அமைச்சர்

(iv) மகிழ்ச்சி

(v) இரத்த தானம்

(vi) செல்வம்

(vii) பல்கலைக்கழகம்

(viii) போட்டிகள்

(ix) முடிவு

(x) விஞ்ஞானி

*(15 புள்ளிகள்)*

***

Department of Examinations Sri Lanka ,

Department of Examinations Sri Lanka ,